27.04.2023
O.S.No. 177/2018

வா. சா. 1 கலா அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் Ph.D. முடித்துள்ளேன். 8 வருடத்திற்கு முன்பு படித்து முடித்தேன். திண்டுக்கல் டவுன், நாயக்கர்புதுத்தெரு முகவரியில் 24 வருடங்களாக குடியிருந்து வந்தேன். எனக்கு 1996 ம் வருடம் திருமணம் ஆனது. 1 ம் பிரதிவாதி எனது தகப்பனார். 2 முதல் 5 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்தவர்கள். 6 ம் பிரதிவாதி 5 ம் பிரதிவாதியின் மனைவி. பிராதில் 1/6 பாகம் கேட்டுள்ளேன். பிராதில் 8 அயிட்டச் சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது மூத்த சகோதரி ஆதிலட்சுமிக்கு 30 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. வாசுகி, அமுதா ஆகியோர்களுக்கு 25 வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆனது. எனக்கு 1996 ல் திருமணம் நடந்தது என்பதற்கு அழைப்பிதழ் உள்ளது. அதை தாக்கல் செய்ய முடியும். தாவா 2 லக்கச்சொத்தை கிரையம் பெற்ற வகையில் 7 ம் பிரதிவாதியை சேர்த்துள்ளேன். பூர்வீகச்சொத்து 40 ஏக்கர் இருக்கிறது. 40 ஏக்கர் இருக்கிறது என்று காட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா உள்ளது. பத்திரங்கள் எங்களிடம் உள்ளது. பூர்வீகமாக 40 ஏக்கர் சொத்து எங்கள் வசம் இல்லை என்றால் சரியல்ல. பூர்வீகச்சொத்திலிருந்து வருடத்திற்கு ரூ.20000 ம் வருமானம் வரும். என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் பெயர் சேதுஅம்மாள். அவருக்கு அவரது தகப்பனார் வீட்டிலிருந்து நகைகள் போட்டு திருமணம் செய்து கொடுத்தார்கள். என் தாயாரது தகப்பனார் குடும்பம் பெரிய குடும்பம். 2 வது லக்கச்சொத்து திண்டுக்கல் டவுன், காளிமுத்துபிள்ளை சந்தில் உள்ள ஓட்டடுக்கு வீடு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 வது லக்கச் சொத்து 23.5.1974 ம் தேதி என் தாயார் மற்றும் என் தகப்பனார் ஆக 2 பேர்கள் பேரிலும் வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் 1975 ம் ஆண்டு

பிறந்தேன். சொத்தை கிரையம் வாங்கும்போது நான் பிறக்கவில்லை. நான் பிறப்பதற்கு முன்பே கிரையம் வாங்கியிருப்பதால் அந்த சொத்துக்கு யார் பணம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதுபோல் பூர்வீகச்சொத்து என்று எதுவும் கிடையாது என்றும் அதனால் அந்த சொத்துக்களில் இருந்து வருமானம் வந்ததாக கூறுவதும் தவறு என்றால் சரியல்ல. 2ம் அயிட்டச் சொத்தை எத்தனை அயிட்டமாக எத்தனை பத்திரங்கள் மூலம் வாங்கினார்கள் என்றால் ஒரே பத்திரமாகத்தான் வாங்கினார்கள். என் பெற்றோர்கள் 2ம் அயிட்டச் சொத்தை வாங்கிய கிரையபத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2வது லக்கச்சொத்தை என் அப்பா மற்றும் அம்மா இருவரும் தங்களது சொந்த பணத்தைக்கொடுத்து கிரையம் பெற்ற தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. ஊரிலிருந்து வந்த பணத்தையும் சேர்த்துதான் அந்த சொத்து வாங்கப்பட்டது. ஊரிலிருந்து பணம் வந்தது என்பதை காட்ட ஆதாரம் இல்லை என்றால் சரிதான். கிரையம் வாங்கிய தேதியிலிருந்து என் அப்பா அம்மா குடியிருந்து அவர்கள் பேரில் வீட்டு வரி ஏற்பட்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் என் அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள் அனைவரும் தாவா 1வது லக்கச்சொத்தில் தான் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். தாவா 2வது லக்கச்சொத்து என் பெற்றோர்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும் அதை பொதுச் சொத்து என்று சொல்ல உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்டச்சொத்து என் பெற்றோர்களுக்கும் எங்களுக்கும் பாத்தியப்பட்ட பொது குடும்ப சொத்து அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லி உள்ளதுபோல இந்து வாரிசுரிமைச் திருத்தச் சட்டம் 1/1990 மற்றும் 39/2005 ன்படி இந்த வழக்கு 2வது அயிட்டச் சொத்தில் எனக்கோ என் சகோதர சகோரிகளுக்கு பாத்தியமில்லை என்றால் சரியல்ல. தாவா 2வது லக்கச்சொத்தை வைரமணிக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாதசாஆ.3

கிரைய ஆவணம் 7 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த ஆவணம் என்றால் சரிதான். வாதசாஆ.3 ல் கிரைய சொத்தின் மதிப்பு ரூ.9,05,000/- என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து கிரைய காலத்தில் வாதசாஆ.3 ல் கண்ட சொத்து மதிப்பு அளவுதான் போகும் என்றும் நான் சொல்வதுபோல் ரூ.30 லட்சம் பெறும் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதசாஆ.3 கிரையச் சொத்திலிருந்து எனக்கு ரூ.50000 ம் என் அப்பா கொடுத்தார். 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் என் அப்பா கொடுத்தார் என்றால் பெரியக்கா தவிர மற்ற 3 அக்காக்களுக்கும் தலா ரூ.50000 ம் கொடுத்துள்ளார். எனக்கும் அக்காக்களுக்கும் பணத்தை காசோலைகளாக என் அப்பா கொடுத்தார். 18.5.2005 ம் தேதி அன்று வாதசாஆ.3 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரையம் முடிக்கும் முன்பு அனைவரும் பேசி முடிவு செய்துதான் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது பெரியக்கா பத்திரத்தில் கையெழுத்து போட்டாரா என்று எனக்கு தெரியாது. கிரையப்பத்திரத்தில் 2 ம் லக்கச்சொத்து என் பெற்றோர்கள் தனித்து கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அனைவரும் சேர்ந்து தான் கிரையம் பெற்றோம். சொத்தை கிரையம் பெற எனது உழைப்பையும் பலனையும் எந்தக்காலத்திலும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதசாஆ.3 பத்திரம் எழுதி பதிவு செய்யும்போது நாங்கள் அனைவரும் பத்திர அலுவலகம் சென்றோம் என்றால் போனமாதிரி நினைவில்லை. கிரையப்பத்திரத்தில் நான் உள்பட, என் சகோதரிகள், என் சகோதரர் அனைவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோமா என்றால் போட்டுள்ளோம். நாங்கள் சாட்சி கையெழுத்து போட்ட பின்னர்தான் பத்திரத்தை அமைத்த சின்னையன் என்பவர் கையெழுத்து போட்டு சீல் வைத்துள்ளார் என்றால் சரிதான். கிரைய காலத்தில் இருந்து தாவா 2 லக்கச் சொத்து கிரையம் பெற்ற வைரமணியிடம் தான் சுவாதீனத்தில் உள்ளது

என்றால் சரிதான். கிரையம் செய்தபோது அந்த சொத்து ஓட்டடுக்கு வீடாக இருந்தது என்றும் 7 ம் பிரதிவாதி கிரையம் பெற்று சொத்தை இடித்து மாடி வீடாக கட்டியுள்ளார் என்றால் சரிதான். 2 ம் லக்கச்சொத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளவாறு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த புகைப்படங்கள் பிவாசாஆ.1 வரிசை. 7 ம் பிரதிவாதி கிரையம் பெற்று கொஞ்சநாளில் ஓட்டு வீட்டை இடித்து புதியதாக வீட்டை கட்டியது எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா 2 லக்கச்சொத்தை 7 ம் பிரதிவாதி அனுபவித்து வருவதில் எனக்கு தாவா இல்லை. என் அப்பாதான் பணம் கொடுக்கவில்லை என்கிறேன். 7 ம் பிரதிவாதி கிரையம் வாங்கி பழைய வீட்டை இடித்து புதிய வீடு கட்டும் வரை நான் எந்த தாவாவும் செய்யவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.3 ல் சாட்சி கையெழுத்து போடும்போது 2 லக்கச்சொத்தை 7 ம் பிரதிவாதிக்கு கிரையம் விற்பது தெரிந்துதான் சாட்சியாக கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். பத்திரத்தில் கையெழுத்து வாங்கும்போது அந்த பத்திரம் 7 ம் பிரதிவாதிக்கு ஈடுபத்திரமாக எழுதிக்கொடுப்பதாக எனது தகப்பனார் சொன்னதாக பிராதில் சொல்லி உள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. தாவா 2 லக்கச்சொத்தைப் பொறுத்து 7 ம் பிரதிவாதி சரியான பிரதிபிரயோஜனத்தின்பேரில் எதார்த்தமாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு பிரச்சனை இல்லை. வழக்குரையில் 7 ம் பிரதிவாதி தாவா 2 லக்கச் சொத்தை கிரையம் பெற்றதில் நான் தாவா எதுவும் செய்ய முடியாது என்றால் சரியல்ல. வீட்டு வரி, மின் இணைப்பு அனைத்தும் 7 ம் பிரதிவாதி பேரில் மாறியுள்ளது என்றால் சரிதான். தாவா 2 லக்கச் சொத்தை வழக்கு போடும் முன்பும், இன்றுவரை நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா 2 லக்கச்சொத்து எங்களது கூட்டு அனுபவத்தில் இருப்பதாகச் சொல்லி பிரிவு 37(2)ன்படி தமிழ்நாடு முத்திரைக்கட்டணச் சட்டத்தின் கீழ் முத்திரைக் கட்டணம் செலுத்தியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதியைப்

பொறுத்தும் அவர் பெற்ற கிரையச் சொத்து பொறுத்தும் எங்களுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி தேவையில்லாமல் சேர்த்துள்ளதால் அவர் பொறுத்து வழக்கு தள்ளுபடியாகனும் என்றால் சரியல்ல.

S SIVAKADATCHAM
Digitally signed by S SIVAKADATCHAM
Date: 2023.04.27 17:58:59 +0530

Principal District Judge,
Dindigul.